## கல்லூரிக் கல்வி இயக்ககம்

| அனுப்புநர், | பெறுநர், |
| --- | --- |
| முனைவர். கோ. கீதா,<br>எம்.எஸ்.சி., எம்.பில்., பி.எச்.டி.,<br>கல்லூரிக் கல்வி இயக்குநர் (மு.கூ.பொ),<br>கல்லூரிக் கல்வி இயக்ககம்,<br>சென்னை – 600 015. | 1. அனைத்து மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள்,<br>2. அனைத்து அரசு கல்லூரி முதல்வர்கள்,<br>3. அனைத்து தொழில்நுட்ப கோட்ட செயற்பொறியாளர்கள் |

திருவள்ளுவர் ஆண்டு – 2054, ஸ்ரீ சோபகிருது வருடம், ஆடி – 19

ந.க. எண். 24293/ ஜெ3/ 2023, நாள். 04 –08–2023

ஐயா / அம்மையீர்,

பொருள்: கல்லூரிக் கல்வித் துறை – அரசு கலை அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளின் கட்டடங்கள் – சிறப்பு பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பணிகள் – 2023–2024 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளைத் தெரிவு செய்வது – தொடர்பாக.

பார்வை: 1 உயர்கல்வித்துறை, மானியக் கோரிக்கை எண். 20 (2023–24)

2 கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் கடித ந.க. எண்.12287/எச்1/2023, நாள். 05.04.2023.

*******

பார்வை 1–இல் காணும் உயர்கல்வித்துறை மான்ய கோரிக்கை எண். 20–ன் படி 2023–2024 நிதியாண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் கல்லூரிக் கல்வி துறைக்கு பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பணிகளுக்காக ரூ.17,67,46,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, தற்போது இணைப்பில் உள்ள அட்டவனையில் குறிப்பிட்டுள்ளவாறு இணை இயக்குநர் அலுவலகங்கள்/ கல்லூரிகளுக்கேற்றவாறு,

குறிப்பிட்ட தொகையானது நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அத்தொகைக்கேற்ப மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள்/ கல்லூரி முதல்வர்கள், சார்ந்த செயற்பொறியாளர்களுடன் கலந்தாலோசித்து, தங்கள் அலுவலகம்/ கல்லூரிக்கு, தேவையான பராமரிப்பு பணிகளை முன்னுரிமை அடிப்படையிலும் தங்கள் அலுவலகம்/ கல்லூரிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகைக்குட்பட்டும், தேர்வு செய்து இணை இயக்குநர்கள்/ முதல்வர்கள் மற்றும் செயற்பொறியாளர்கள் கையொப்பமிட்டு முன்னுரிமை பட்டியலினை(Priority list) இவ்வலுவலகத்திற்கு 18.08.2023 தேதிக்குள் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இணை இயக்குநர்கள்/ கல்லூரி முதல்வர்கள், தங்கள் அலுவலகம்/ கல்லூரியில் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளைத் தெரிவு செய்கையில், கட்டடங்கள் கட்டப்பட்ட ஆண்டினைக் கருத்தில் கொண்டு ஆண்டு பராமரிப்பு, மாணவ மாணவியருக்கான கழிவறை வசதி, வகுப்பறை, மாற்றுத்திறனாளிக்கான சாய்தளம் மற்றும் கழிவறை வசதிகள், குடிநீர் வசதி, வகுப்பறை மற்றும் ஆய்வுகூடங்களில் மேற்கூரை ஒழுகுதல் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். இதனை கருத்தில் கொண்டு, முன்னுரிமை பட்டியலை (Priority list) சமர்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். .

. மேலும், சென்ற நிதியாண்டில் இணை இயக்குநர்கள்/கல்லூரி முதல்வர்கள் தங்கள் அலுவலகம்/ கல்லூரிக்கு ஒப்பளிக்கப்பட்ட பணிகள் நிறைவு பெற்றமைக்கான பணி நிறைவுச் சான்றினையும் 18.08.2023 தேதிக்குள் கல்லூரிக் கல்வி இயக்ககத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கல்லூரிக் கல்வி இயக்குநர் (மு.கூ.பொ)

4.8.23

நகல்

தலைமைப் பொறியாளர்,
தொழில்நுட்ப கல்வி வட்டம்,
பொதுப்பணித்துறை, சென்னை – 25.

## ANNEXURE

**R.C. No. 24293/J3/2023**

| Type of Office/Colleges | Nos | Amt ( in lakhs) | | | |
|---|---|---|---|---|---|
| | | Civil | Electrical | Total | Grand Total |
| RJDs | 8 | 2 | 1 | 3 | **24** |
| Gr.I | 58 | 13 | 4 | 17 | **986** |
| **Gr.II** | | | | | |
| Old Colleges | 4 | 8 | 4 | 12 | **48** |
| More than five years age (1.6.18 before) | 16 | 6 | 3 | 9 | **144** |
| Less than five years age (1.6.18 after) | 11 | 3 | 2 | 5 | **55** |
| B.Ed. Colleges | 7 | 6 | 2 | 8 | **56** |
| Temp Buildings | 34 | 1.5 | 0.5 | 2 | **68** |
| 41 Const Colleges | 41 | 2.5 | 1 | 3.5 | **143.5** |
| Total Gr.II Colleges | 113 | | | | |
| **TOTAL COLLEGE NOS** | **171** | | | | **1524.50** |
| **Total** | | | | | 15,24,50,000 |
| **Rupees Fifteen Crore Twenty four Lakh Fifty thousand only** | | | | | |

4/8/23

**Director of Collegiate Education (FAC)**

4.8.23